

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 30-09-2023

# மணிப்பூர் மீண்டும் எரிகிறது!

மே - சூன் - சூலை - ஆகஸ்ட் - செப்டம்பர் என ஐந்து மாதமாக எரிந்து கொண்டிருக்கிறது மணிப்பூர் மாநிலம். ஒன்றிய பா.ஜ.க. அரசின் கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடு இது. அந்த மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசின் கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடு இது.

ஒரே ஒரு மாநிலத்தின் பிரச்சினையைக் கூடத் தீர்க்க முடியாமல் - கூச்சமே இல்லாமல் நாடாளுமன்றத்தில் எப்படித்தான் பிரதமரும் - உள்துறை அமைச்சரும் தலைநிமிர்ந்து பேசுகிறார்கள் என்றே தெரியவில்லை? அவர்களுக்கு இது ஒரு பிரச்சினையாகவே தெரியவில்லையா? மணிப்பூரை வேறு நாடு என்று நினைத்துக் கொள்கிறார்களா?

மணிப்பூர் மாநிலத்தை கலவர பூமியாக அறிவித்து அம்மாநில ஆளுநர், நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார். மணிப்பூரில் மே மாதம் முதல் இணைய சேவைகள் துண்டிக்கப்பட்டிருந்தன. செப்டம்பர் 23-ந் தேதிதான் முழுமையாக இணைய சேவை மீண்டும் வழங்கப்பட்டது. தற்போது மாணவர்கள் படுகொலை காரணமாக வன்முறை பரவாமல் இருக்க அடுத்த 5 நாட்களுக்கு மணிப்பூரில் இணைய சேவை துண்டிக்கப் பட்டிருக்கிறது. பள்ளி, கல்லூரிகளை மீண்டும் மூட உத்தரவிட்டுள்ளது மாநில அரசு. அதாவது மே மாதம் முதல் ஐந்து மாதங்களாக எரிகிறது மணிப்பூர். எரிந்து கொண்டே தான் இருக்கிறது.

கடந்த மே மாதம் மணிப்பூரில் கலவரம் ஏற்பட்டபோது நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போய்விட்டனர். அவர்கள் பற்றிய விவரங்கள் சமூக வலைதளங்களில் வெளியிடப்பட்டன. அதன் அடிப்படையில் சி.பி.ஐ. மற்றும் விசாரணைக்குழுவினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். காணாமல் போன மாணவர், மாணவிகளில் ஹிஜம் மற்றும் பிஜம் என்ற இருவரும் முகாம் ஒன்றில் புல்வெளி தரையில் உட்கார வைத்து இருப்பது போன்ற காட்சியும், அவர்களுக்குப் பின்னால் ஆயுதம் ஏந்தி சிலர் நிற்பது போன்ற காட்சியும் வெளியாகியுள்ளது.

அதே வீடியோவில் அடுத்த சில நிமிடங்களில் அந்த 2 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடப்பது போன்ற காட்சிகளும் இடம் பெற்று இருந்தன. இந்த வீடியோ காட்சிகள் சமூகவலைதளங்களில் வைரலாகப் பரவி வருகிறது. இது தொடர்பாக, மணிப்பூர் முதல்வர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், "இணைய சேவை பயன்பாட்டுக்கு வந்த பின்னர் இரண்டு மாணவர்களின் புகைப்படங்கள் வைரலாகிக் கொண்டிருக்கின்றன. இறந்துபோன மாணவர்கள் ஹிஜாம் லின்தோயின்காம்பி (17), பிஜாம் ஹேம்ஜித் (20) என அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த இரண்டு மாணவர்களும் கடந்த ஜூலையில் காணாமல் போனவர்கள். மணிப்பூர் வன்முறை வழக்கு ஏற்கெனவே சி.பி.ஐ. வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மக்கள் விருப்பத்தின் பேரில்தான் வழக்குகள் சி.பி.ஐ. வசம் ஒப்படைக்கப்பட்டன. தற்போது வெளியான புகைப்படம் தொடர்பாக உறுதியான நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படும். இந்த கொடுங் குற்றத்தைச் செய்தவர்களுக்கு நிச்சயமாகக் கடுமையான தண்டனை வழங்கப்படும். அந்தப் புகைப்படத்தைப் பார்க்கும்போது அந்த இரண்டு மாணவர்களும் ஏதோ ஓர் ஆயுதக் குழுவின் வனப்பகுதி கூடாரத்தில் இருப்பது புலப்படுகிறது. அந்த மாணவர்கள் படுகொலையின் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பது குறித்து மத்திய பாதுகாப்பு அமைப்புகளுடன் மணிப்பூர் காவல்துறையினரும் இணைந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்" என விளக்கம் அளிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்தி துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் மணிப்பூர் மாநில அரசு சொன்னதை மக்கள் நம்பத் தயாராக இல்லை.

இதனைத் தொடர்ந்து, மாநிலம் முழுவதும் மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். தலைநகர் இம்பாலில் முதல்வர் பிரேன்சிங்கின் அலுவலகம் நோக்கி பேரணியாகச் செல்ல முயன்ற மாணவர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் பலரும் காயமடைந்தனர். கண்ணீர் புகைக்குண்டுகள் வீசப்பட்டன. இந்தப் போராட்டம் இன்னமும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

இந்நிலையில், மணிப்பூர் மாநிலத்தை கலவர பூமியாக அறிவித்து அம்மாநில ஆளுநர் அனுசுயா உய்கி உத்தரவிட்டுள்ளார். இதற்காக ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்படுவதாகவும் அவர் அறிவித்துள்ளார். 19 மாவட்டங்கள் தவிர பிற பகுதிகள் அனைத்தும் பதற்றத்துக்குரிய பகுதியாகத் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் 1 முதல் அடுத்த 6 மாதங்களுக்கு இந்தச் சட்டம் அமலில் இருக்கும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

இதைத் தவிர அந்த மாநில அரசால் எதுவும் செய்ய முடியவில்லை. ஒன்றிய அரசாலும் எதுவும் செய்ய முடியவில்லை.

இவ்வளவு நடந்த பிறகும் அந்த மாநிலத்தின் முதலமைச்சரை மாற்றக் கூட பா.ஜ.க. தலைமையால் முடியவில்லை. அந்த நடவடிக்கையைக் கூட எடுக்கவில்லை. முதலமைச்சர் பிரேன் சிங் மீதான நம்பிக்கை யின்மைதான் இந்தக் கலவரங்களுக்குக் காரணம். அவரை நீக்குவதன் மூலமாக போராட்டக் காரர்களை அமைதிப்படுத்தலாம். அதனைக் கூட பா.ஜ.க. தலைமையால் செய்ய முடியவில்லை.

**பிரதமர் நரேந்திர மோடி, இது வரை மணிப்பூர் பக்கமே போகவில்லை. செப்டம்பர் முதல் வாரத்தில் கலவரம் கொஞ்சம் அடங்கியது போலத் தெரிந்தது. அப்போதாவது பிரதமர் மோடி போய் மக்களைச் சந்தித்திருக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் தனியாக விவாதம் கூட நடத்தத் தயாராக இல்லை. மற்ற பிரச்சினைகளைப் பற்றி எல்லாம் பேசி விட்டு - ஒப்புக்கு கடைசியாக ஐந்து நிமிடம் பேசினார் பிரதமர். உள்துறை அமைச்சர் அமித்ஷா, அவருக்குத் தொடர்பு இல்லாத அரசியல் பிரச்சினைகளுக்கு எல்லாம் விளக்கம் அளிப்பார். ஆனால் அவர் பொறுப்பேற்க வேண்டிய மணிப்பூர் கலவரங்களை மட்டும் மறந்துவிடுவார்.**

**மணிப்பூரில் நடப்பது இனவாதப் படுகொலைகள். மாநில பா.ஜ.க. அரசும் ஒன்றிய பா.ஜ.க. அரசும் - கைகட்டி வேடிக்கை பார்க்கவே நடக்கிறது. இவர்கள் வேடிக்கை மட்டுமே பார்ப்பார்கள் என்பதால் நடக்கிறது.**

## புதியதாக
## 8வது கண்டம் கண்டுபிடிப்பு!

நியூசிலாந்து, செப். 29 -
உலகில் தற்போது வரை ஆசியா, தென் அமெரிக்கா, வட அமெரிக்கா, ஆப்பிரிக்கா, அண்டார்டிகா, ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட 7 கண்டங்கள் உள்ளன. ஆனால், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கண்டங்கள் எப்படி இருந்தன என்பது புரியாத புதிரான நிலையில் தற்போது உலகின் 8வது கண்டத்தை புவியியல் ஆய்வு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.

இந்த கண்டத்திற்கு விஞ்ஞானிகள் ஜீலந்தியா என்று பெயரிட்டுள்ளனர். கடல் தளத்தில் இருந்து மீட்கப்பட்ட பாறை மாதிரிகளில் இருந்து பெறப்பட்ட தகவல்களை பயன்படுத்தி ஆராய்ச்சியாளர்கள் புதிய கண்டத்தை கண்டுபிடித்துள்ளனர்.

இந்த கண்டம் 375 ஆண்டுகள் மறைந்திருந்ததாகவும் அவர்கள் கூறியுள்ளனர். இது நியூசிலாந்துக்கு அருகே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பசிபிக் பெருங்கடலின் தெற்குப் பகுதியில் சுமார் 3500 அடி ஆழத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த புதிய கண்டத்தின் 94 சதவீத பகுதி நீருக்கு அடியில் மூழ்கியுள்ளது. ஒட்டுமொத்தமாக 49 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக இந்த கண்டம் அமைந்துள்ளது. இதில் நியூசிலாந்தை போல சில தீவுகள் உள்ளதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இது மடகாஸ்கர் தீவை காட்டிலும் 6 மடங்கு பெரியது என தெரிவித்துள்ளனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விழுப்புரம் அண்ணா பொறியியல் கல்லூரியில் கல்லூரி மாணவர்களுக்கிடையேயான பேச்சுப் போட்டிகளை துவக்கி வைத்து, வாழ்த்துரை வழங்கினார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் சி.பழனி, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், ஒன்றியச் செயலாளர்கள் தே.முருகவேல். ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், ஒன்றிய குழுத் தலைவர் இ.சச்சிதானந்தம், நிர்வாக பணியாளர் முன்னேற்றச் சங்கம் வாலிபால் மணி நகர பொருளாளர் என்.என்.இளங்கோ, மாவட்ட அணி அமைப்பாளர்கள் தொழிலாளர் அணி பாலு கார்த்தி, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தின் அழைப்பினை ஏற்றுச் சென்ற

## அமைச்சர் எ.வ.வேலு - சிங்கப்பூர் துறைமுகத்தைப் பார்வையிட்டார்!

### "அந்நிய முதலீட்டை ஈர்க்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு உதவும்" என உறுதி!

சிங்கப்பூர், செப். 30-
பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தின் அழைப்பிற்கிணங்க, 27.9.2023 அன்று, சென்னையில் இருந்து சிங்கப்பூர் சென்றார்.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சிங்கப்பூரிலுள்ள இந்திய தூதரக ஆணையத்தின் முதன்மைச் செயலாளர் டி.பிரபாகர் மற்றும் பிற அதிகாரிகள் அடங்கிய குழுவுடன் 'சிங்கப்பூர் துறைமுக சரக்குப் பெட்டக முனையத்தை' 27.9.2023 அன்று பார்வையிட்டார்.

அமைச்சர் எ.வ.வேலுவிடம், சிங்கப்பூர் துறைமுகத்தின் சிறப்புகளைப் பற்றி, சிங்கப்பூர் துறைமுகத்தின் பிரதிநிதி எடுத்துக் கூறினார்.

பன்னாட்டு துறைமுக சரக்குப் பெட்டக முனையங்களில், சிங்கப்பூர் சரக்குப் பெட்டக முனையம் முதன்மையான ஒன்றாகும். இது சிங்கப்பூர் சரக்குப் பெட்டகப் பரிமாற்ற மையமாக செயல்பட்டு வருகிறது. இந்த சரக்குப் பெட்டக முனையம், துறைமுகச் சேவைகள் மற்றும் சரக்கு தீர்வுகளை வழங்குகிறது.

2023 ஆம் ஆண்டில், சரக்குகளைக் கையாள்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டபோதிலும், இந்த துறைமுகம் மட்டும், 37 மில்லியன் சரக்குப் பெட்டகங்களை (37million TEU) வெற்றிகரமாக கையாண்டுள்ளது. பேட்டரி ஆற்றல் சேமிப்பு அமைப்பு (Battery Energy Storage System-BESS), கணினி சார்ந்த ஒருங்கிணைந்த துறைமுக முனைய இயங்குதல் வசதி (Computer Integrated Terminal Operations Systems-CITOS) மற்றும் துறைமுக வலைதளம் (Portnet) போன்ற நவீன தொழிற்நுட்பங்கள். இந்த சாதனைக்கு காரணமாகும். சிங்கப்பூர் துறைமுகம் 55 கப்பல்கள் நிறுத்தும் தளம் மற்றும் சுமார் 50 மில்லியன் (50million TEU) சரக்குப் பெட்டகங்களைக் கையாளும் திறன் கொண்டது என்று, அமைச்சர் எ.வ.வேலுவிடம் விளக்கிக் கூறினார்.

**தமிழ்நாட்டில் 1076 கி.மீ. கடற்கரை!**

சிங்கப்பூர் துறைமுக அலுவலர்களிடம், அமைச்சர் எ.வ.வேலு, தமிழ்நாட்டில் 1,076 கிலோ மீட்டர் நீளமுடைய கடற்கரை உள்ளது என்பதை தெரிவித்து, கடலூர் மற்றும் நாகப்பட்டிணம் ஆகிய இடங்களில் சிறு துறைமுகங்கள் அமைந்துள்ளன. இந்ததுறைமுகங்களையோ அல்லது இதர சிறு துறைமுகங்களில், ஏதேனும் பொருத்தமான சிறு துறைமுகங்களை மேம்படுத்துவது தொடர்பாக, விரிவாக விவாதித்தார்.

மேலும், தமிழ்நாட்டின் கடற்கரையின் திறனைப் பயன்படுத்துவதை, நோக்கமாகக் கொண்ட பிற வரவிருக்கும் திட்டங்களைப் பற்றியும் எடுத்துரைத்தார்.

**அந்நிய முதலீட்டை அதிகரிக்க ஆலோசனை!**

தமிழ்நாட்டில் சிறு துறைமுகங்களை மேம்படுத்த அன்னிய முதலீட்டை அதிகரிப்பதற்கான சாத்தியமான வழிகள் குறித்தும், சிங்கப்பூர் துறைமுகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

துறைமுகங்கள் மற்றும் கடல்சார் திட்டங்களுக்கு, முதலீடுகளை எளிதாக்குவதற்கு, அனைத்து உதவிகளையும் வழங்குவதாக, அமைச்சர் எ.வ.வேலு உறுதியளித்தார்.

தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை மேம்படுத்த, அமைச்சர் எ.வ. வேலு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு, சிங்கப்பூர் துறைமுகப் பிரதிநிதிகள் உறுதுணையாக இருப்பதாகத் தெரிவித்தார்கள்.

### சென்னை, காளிகாம்பாள் திருக்கோயில் நிகழ்ச்சி தொடங்கி வைப்பு!

## தி.மு.க. பலம் வாய்ந்த எஃகு கோட்டையாகத் திகழ்கிறது!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, செப்.30-
இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று முன்தினம் (28.09.2023) சென்னை, காளிகாம்பாள் திருக்கோயி லில் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற 108 திருவிளக்கு வழிபாட்டினை தொடங்கி வைத்தார்.

பின்னர், அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, 2022-2023 ஆம் நிதியாண்டில் மாதந்தோறும் பௌர்ணமி நாளன்று மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், திருவேற் காடு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், சென்னை காளிகாம்பாள் திருகோயில் உள்பட 12 திருக்கோயில்களில் 108 திருவிளக்கு வழிபாடு நடத்தப்படும் என அறிவித்து கடந்த 14.06.2022 அன்று குலசேகரப்பட்டி னம் முத்தாரம்மன் திருக்கோயிலில் தொடங்கி வைத்தோம். திருவிளக்கு பூஜைக்கு தேவைப்படுகின்ற செலவில் நான்கில் ஒரு பங்கை பக்தர்களிடம் பெறுவது என்றும் மீதத் தொகையை அந்தந்த திருக்கோயில்கள் ஏற்றுக் கொள்வது என்றும் முடிவெடுத்து செயல்படுத்தி வருகிறோம். இன்று நடைபெற்ற திருவிளக்கு பூஜையோடு சேர்த்து இது வரை 16 திருவிளக்கு பூஜை நடைபெற்றுள்ளது.

அதனை தொடர்ந்து, 2023-2024 ஆம் நிதி யாண்டில் மேலும் 5 திருக்கோயில்களில் 108 திருவிளக்கு வழிபாடு நடத்தப்படும் என அறிவித்து திருவொற்றியூர் வடிவுடையம்மன் திருக்கோயில், இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம், பட்டீசுவரம் தேனுபுரீஸ்வரர் திருக்கோயில், பெரியபாளையம் பவானியம்மன் திருக்கோயில், திருவண்ணாமலை மாவட்டம், படைவீடு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயில் ஆகிய 5 திருக்கோயில்களில் கடந்த 5.05.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. அதன்படி இத்திருகோயில்களில் இன்று நடைபெற்றது 5வது திருவிளக்கு பூஜையாகும். ஒட்டு மொத்தமாக இதுவரை 17 திருக்கோயில்களில் 108 திரு விளக்கு பூஜை நடைபெற்றதில் 21,492 பெண்கள் பங்கேற்று சிறப்பித்துள்ளனர். இப்படி ஆயிரக் கணக்கான பெண் பக்தர்கள் இந்த திருவிளக்கு பூஜையில் பங்கேற்று தங்களின் இல்லம் சுபிட்சமாக இருக்கவும், இல்லாமையை இல்லாமல் செய்யவும் குடும்பம் தழைத்தோங்கவும் பிரார்த்தனை செய்து பெரும் மகிழ்ச்சி அடைகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அனுமதியை பெற்று வருகின்ற காலங்களில் கூடுதலான திருக்கோயில்களில் 108 திருவிளக்கு பூஜையை மேற்கொள்ள இருக்கின்றோம்.



நாங்கள் வளர்ச்சியை நோக்கி பயணிக்கிறோம் இது போன்ற ஆன்மிகத்திற்கு தேவையான அடிப்படை தேவைகளை நிறைவேற்றுகின்ற பணிகளை நிறைவு செய்கிறோம். விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகிறது என்பதால் ஒன்றிய அரசு அளித்த தேர்தல் வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கு ஆளுநரை அழுத்தம் கொடுக்கச் சொல்லுங்கள். இதை பத்திரியாளர்களாகிய நீங்கள் அவரிடம் கேளுங்கள்.

திமுகவை பொறுத்தளவில் யாரும் இடித்துப் பார்க்க முடியாத எஃகு கோட்டையாகும். எவரும் தாக்கி தகர்த்தெறிய முடியாத மிகவும் பலம் வாய்ந்த இரும்பு கோட்டையாக திகழ்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பல்வேறு முனைப்பான திட்டங் களால் குறிப்பாக பெண்களுக்காக அவர் எடுத்து வருகின்ற நடவடிக்கைகளால் அது பேருந்து விடியல் பயணம் ஆகட்டும், காலை சிற்றுண்டி திட்டம் ஆகட்டும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தள்ளுபடி செய்யப்பட்ட கடன் தொகை ஆகட்டும், அதேபோல் சமீபத்தில் உலகையே திரும்பி பார்க்க வைத்த கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் என பல்வேறு திட்டங்களால் பலனடைந்து இருக்கின்ற பெண்களால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வாக்கு வங்கி மேலும் உயர்ந்து கொண்டே இருக்கின்றது. நாங்கள் வேறு கட்சிகளை எல்லாம் பற்றி கவலைப்படுவதில்லை. எங்களுடைய பணி மக்கள் பணி செய்து கிடப்பது, மக்களுடைய அன்பை பெறுவது, அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவது போன்றவைதான். இதில் ஒன்றிய துணைக்கண்டத்திலேயே முன்மாதிரியான முதல்வராக தமிழ்நாடு முதலமைச்சர் திகழ்ந்து கொண்டிருப்பதால் திராவிட முன்னேற்றக் கழகத்தை பொறுத்த அளவில் எப்பொழுதுமே அதன் வாக்கு வங்கி உயர்ந்து கொண்டே இருக்கின்றது. சிறுபான்மையின மக்கள் குறிப்பாக இஸ்லாமிய மக்களுக்கும் திமுகவிற்கும் இடையே உள்ள உறவு தொப்புள் கொடி உறவு போன்றது. ஆகவே திமுகவின் வாக்கு வங்கி எந்த காலத்திலும் குறையாது இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் எஸ்.சர்வேஸ்வரன், அறங்காவலர்கள் கே.யுவராஜ், எஸ்.மோகன், ஜெ.ரமேஷ், ஆர்.சுப்பிரமணி, திருக்கோயில் சிவாச் சாரியார் காளிதாஸ், செயல் அலுவலர்கள் நற்சோணை, விக்னேஷ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தின் அழைப்பிற்கிணங்க, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, 27.9.2023 அன்று தமிழ்நாடு அரசு அதிகாரிகள் அடங்கிய குழுவுடன், சிங்கப்பூர் துறைமுகத்தில் (PSA) சரக்குப் பெட்டக முனையத்தைப் பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியின் போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சிங்கப்பூரிலுள்ள இந்திய தூதரக ஆணையத்தின் முதன்மைச் செயலாளர் டி.பிரபாகர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.